வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 29.12.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

- இளைஞர்கள் புதியதொழில் நுட்பங்களை, நன்னெறிகளின் அடிப்படையிலான கவனத்துடன் அணுக வேண்டும் என, குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதா கிருஷ்ணன் கூறி உள்ளார்.

- இன்று புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் 30-ஆவது பட்டமளிப்பு விழாவில் குடியரசு துணைத் தலைவர் கலந்து கொண்டு, மாணவர்களுக்கு பட்டங்கள் மற்றும் பதக்கங்களை வழங்கினார்.

- முன்னதாக புதுச்சேரியில் நடைபெற்ற பொது வரவேற்பு நிகழ்ச்சியிலும் குடியரசு துணைத் தலைவர் கலந்து கொண்டு, ஸ்மார்ட் நகரத் திட்டத்தின் கீழ் வீட்டு வசதி பெறும் பயனாளிகளுக்கு சாவிகளை வழங்கினார்.

- 2025-ஆம் ஆண்டில் இந்தியாவின் தேசிய பாதுகாப்புக் கட்டமைப்பு, பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையின் கீழ், உறுதியான முறையில் வலுவடைந்துள்ளது.

பட்டமளிப்பு

குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் இன்று புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் 30-ஆவது பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவ-மாணவிகளுக்கு பட்டங்களையும், பதக்கங்களையும் வழங்கி சிறப்பித்தார். செயற்கை நுண்ணறிவு,

தானியங்கி இயந்திரங்கள், உயிரி தொழில் நுட்பம் மற்றும் டிஜிட்டல் தொடர்புகளால், வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் தாக்கம் ஏற்பட்டு வரும் நடப்பு யுகத்தில் படித்த இளைஞர்கள் தொழில் நுட்பத்தை, உற்சாகம் மட்டுமின்றி, நன்னெறிகளின் அப்படையிலான கவனத்துடனும் அணுக வேண்டும் என அவர் தமது உரையில் கூறினார். டிஜிட்டல் வசதிகளால் செயல் திறன் அதிகரிக்கலாம் என்றாலும், சுய சிந்தனையும், சமூகத்துடனான தொடர்புகளும் அற்றுப் போவதை அனுமதிக்க கூடாது என்று அவர் குறிப்பிட்டார். படிப்பு முடிக்கும் மாணவர்கள், 2020-ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கையின் தூதுவர்களாக செயல்பட்டு கல்வித் தாகம், புதுமையாக்கம், மற்றும் தகைசால் உணர்வை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என குடியரசு துணைத் தலைவர் கேட்டுக் கொண்டார். மனப்பாட பழகத்தில் இருந்து மாணவர்களை விடுவித்து அறிவுசார் சிந்தனையை தூண்டுவதே புதிய கல்விக் கொள்கையின் நோக்கம் என்றும், கல்வியில் குறுகிய எல்லைகளைக் களைந்து, பல்துறைக் கற்றல் மற்றும் முழுமையான வளர்ச்சியை ஊக்கப்படுத்த இக்கொள்கையில் முக்கியத் துவம் அளிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். சமுதாயத்தின் அனைத்து பிரிவினரையும் உள்ளடக்கிய வளர்ச்சியே சரியான வளர்ச்சி என்றும் அவர் குறிப்பிட்டார். புதுச்சேரி பல்கலைக் கழகம், NAAC-A plus அங்கீகாரம் பெற்றுள்ளதையும், 113 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உயர்கல்வி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் எட்டப்பட்டு இருப்பதையும்

குடியரசு துணைத் தலைவர் பாராட்டினார். புதுச்சேரி பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 28 பேராசிரியர்கள் உலகின் 2 சதவிகித முன்னணி விஞ்ஞானிகள் பட்டியலில் இடம் பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரியது என்றும் அவர் கூறினார்.

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் புதிதாக திறக்கப்பட்ட சர்வதேச மாநாட்டு மையத்திற்கு மகாகவி பாரதியார் பன்னாட்டு மாநாட்டு மையம் என குடியரசு துணைத் தலைவர் பெயர் சூட்டினார். முன்னதாக பல்கலைக் கழக

வளாகத்தில் தேசிய கொடியுடன் கூடிய 100 அடி கொடிக் கம்பத்தின் கல்வெட்டை அவர் திறந்து வைத்து மரக் கன்று ஒன்றையும் நட்டு வைத்தார்.

பட்டமளிப்பு விழாவில், துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், மாநில கல்வி அமைச்சர் திரு நமச்சிவாயம், நாடாளுமன்ற உறுப்பினர் திரு செல்வ கணபதி, சட்டமன்ற உறுப்பினர் திரு கல்யாண சுந்தரம், தேசிய பாதுகாப்பு ஆலோசனை வாரியத்தின் உறுப்பினர் திரு சதீஷ் ரெட்டி, புதுச்சேரி பல்கலைக் கழக துணை வேந்தர் பேராசிரியர் பிரகாஷ் பாபு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வரவேற்பு

புதுச்சேரி தொன்மையான நாகரீகம் மட்டுமின்றி அன்பு அரவணைப்பு போன்ற நிரந்தர மாண்புகளை உலகிற்கு பறைசாற்றும் நகரமாகவும் திகழ்வதாக குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறி உள்ளார். குடியரசு துணைத் தலைவராக பதவி ஏற்ற பின்னர் இன்று முதல் முறையாக புதுச்சேரிக்கு வருகை புரிந்த அவர் மக்கள் அளித்த வரவேற்பு நிகழ்ச்சியில் பேசுகையில் இவ்வாறு கூறினார். பழங்காலத்தில் இருந்தே கலாச்சார மேன்மையை பாதுகாக்கும் நகரம் புதுச்சேரி என்றும், இந்த மண்ணில் தான், பாரதியார், வ வே சு அய்யர், பாரதிதாசன் போன்றோர், தமிழை அறிவுச் சுடராக மேம்படுத்தினார்கள் என்றும், அவர் தெரிவித்தார். புதுச்சேரி இன்று வரை தனது தனித்துவ அடையாளத்தை தொடர்ந்து பராமரித்து, அனைத்து பிரிவு மக்களையும் வரவேற்கும் நகரமாக திகழ்வது பாராட்டுக்குரியது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ராதாகிருஷ்ணன்

தமிழ் மீது அளப்பரிய பாசம் கொண்டவர் பிரதமர் திரு நரேந்திர மோடி என்றும் தமிழே மிக தொன்மையான மொழி என வானொலி உரையில் பிரதமர் பறைசாற்றியதே இதற்கு சான்றாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். பிரதமர் தமிழ் மீது கொண்டுள்ள பாசம் காரணமாகவே தமிழ்நாடு மற்றும்

புதுச்சேரிக்கு அதிக அளவில் ஸ்மார்ட் சிட்டி திட்டங்களை கொடுத்திருப்பதாக அவர் தெரிவித்தார். குடியரசு துணைத் தலைவர் உரையில் இருந்து ஒரு பகுதி.....

(வாய்ஸ்- சிபி ராதாகிருஷ்ணன்)

ஸ்மார்ட் நகர திட்டத்தின் கீழ் குமரகுரு பள்ளத்தில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளின் சாவிகளை, குடியரசு துணைத் தலைவர் விழாவின் போது பயனாளிகளிடம் ஒப்படைத்தார். குமரகுரு பள்ளம் பகுதியில், ஸ்மார்ட் சிட்டி வீட்டு வசதி திட்டப் பயனாளிகளையும் குடியரசு துணைத் தலைவர் நேரில் சென்று கலந்துரையாடினார். பின்னர் ஈஸ்வரன் கோவில் வீதியில் பாரதியார் நினைவகத்தில் பாரதியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து பெட்டி செமினார் சிபிஎஸ்இ பள்ளியில் மேல்நிலைப் பள்ளிக் கட்டடத்தை குடியரசு துணைத் தலைவர் திறந்து வைத்தார்.

ஆண்டு இறுதி-பாதுகாப்பு-

அடுத்த இரண்டு நாட்களில் முடிவடையும் 2025-ஆம் ஆண்டு, இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் முக்கிய அத்தியாயமாக அமைந்துள்ளது. அரசின் சீர்திருத்தக் கொள்கைகள், முன்னேற்றமாகவும் முக்கிய தாக்கங்களாகவும் மாறியதை இவ்வாண்டில் நாம் கண்டோம். சீர்திருத்தங்களின் ஆண்டு என்னும் இந்த சிறப்பு தொடரில் இவ்வாண்டு பாதுகாப்புத் துறையில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் குறித்து ஒரு தொகுப்பு.

(வாய்ஸ்)

2025-ஆம் ஆண்டில் இந்தியாவின் தேசிய பாதுகாப்புக் கட்டமைப்பு, பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையின் கீழ், உறுதியான முறையில் வலுவடைந்துள்ளது. தீவிரவாத தாக்குதல்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை, அணு ஆயுத மிரட்டலுக்கு கொஞ்சமும் அஞ்சாமை, தீவிரவாதிகளுக்கும்-தீவிரவாதிகளின் ஆதரவாளர்களுக்கும் இடையே வித்தியாசம் பாராமை, எந்த ஒரு பேச்சு வார்த்தையிலும் தீவிரவாத எதிர்ப்புக்கே முதலிடம், இந்தியாவின் இறையாண்மையில் சமரசமின்மை ஆகிய 5 முக்கிய நிலைப்பாடுகளை, அரசு இவ்வாண்டில் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது.

இதற்கு ஏற்பவே, பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு எதிராக இவ்வாண்டு மே-7-ஆம் தேதி, பாகிஸ்தானிய தீவிரவாதிகள் மீது **ஆபரேஷன் சிந்தூர்** ராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்நடவடிக்கையின் போது, இந்தியப் படைகள், பாகிஸ்தானிய தீவிரவாதக் கட்டமைப்பிற்குள் ஆழமாக புகுந்து, சுமார் 100

*ஆண்டு இறுதி-பாதுகாப்பு- 3 (17)*

தீவிரவாதிகளை தாக்கி அழித்தன. மே 10-ஆம் தேதி பாகிஸ்தானின் 11 விமான தளங்கள் துல்லியமாக தாக்கப்பட்ட போது, இந்திய ஏவுகணை எதையும் இடைமறிக்க, பாகிஸ்தானால் இயலவில்லை. **பிரம்மோஸ்** ஏவுகணைகள், **ரஃபேல்** ரகப் போர் விமானங்கள் மற்றும் **டிரோன்**களின் உதவியுடன் ஒருங்கிணைந்த முறையில் மிகத் துல்லியமாக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. **உள்நாட்டு தொழில் நுட்பத் திறன்களின்** அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இந்தியாவின் இந்நடவடிக்கை, உலக அளவில் கவனம் பெற்றது.

2025-ஆம் ஆண்டில் இந்தியாவின் **பாதுகாப்பு உற்பத்தி**, முன் எப்போதும் இல்லாத அளவில், 1 லட்சத்து 54 ஆயிரம்கோடி ரூபாயைத் தாண்டி அதிகரித்தது. நடப்பு நிதியாண்டில், பாதுகாப்புத் துறைக்கான அரசின் பட்ஜெட் ஒதுக்கீடுகளும், 6 லட்சத்து 81 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டன. இவ்வாண்டில் மொத்தம் 4 லட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான **ஆயுதக் கொள்முதல் உத்தேசங்களுக்கு** ஒப்புதல் அளிக்கப்பட்டது. உள்நாட்டிலேயே வடிவமைத்து தயாரிக்கப்பட்ட நீர் மூழ்கிக் கப்பல்களும், எதிரிகள் அறியா வண்ணம் சென்று தாக்கும் கப்பல்களும், ஏகே 203 ரக துப்பாக்கிகளும் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டன. **அக்னி பிரைம்** ஏவுகணையை ரயில் மூலம் ஏவி பார்க்கும் பரிசோதனையும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாண்டு **உத்தரபிரதேஷ் மற்றும் தமிழ்நாடு பாதுகாப்பு தொழிலக நெடும் பாதைகள்**, மொத்தம் 9 ஆயிரத்து 100 கோடி ரூபாய் அளவிற்கு

முதலீடுகளை ஈர்த்துள்ளன. 66 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டு வாய்ப்புகளை திறந்து விடும் வகையில் 289 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

தற்போது ஆண்டு முடிவடையும் தருணத்தில், பாதுகாப்புத் தயார் நிலை, தொழில் நுட்ப நம்பிக்கை, தேசிய பாதுகாப்பில் உறுதிப்பாடு, மற்றும் பாதுகாப்புத் துறையில் சுயசார்பு நோக்குடன் கூடிய நாடாக, இந்தியா தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது என்றால்,அது மிகையல்ல.

முர்மு

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு இன்று, ஜார்கண்ட் மாநிலம் ஜாம்ஷெட்பூரில் சந்தாலி மொழிக்கான ஒல்-சிக்கி எழுத்து வடிவத்தின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டார். முன்னதாக சந்தாலி பழங்குடி மக்களின் ஜெகர்த்தான் பிராத்தனைத் தலத்தில் அவர் வழிபாடு செய்து, ஒல்-சிக்கி எழுத்து முறையை உருவாக்கிய, பண்டிட் ரகுநாத் முர்முவின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலத்தினார். 22-ஆவது பார்சி மகா சந்தாலி மாநாட்டில் குடியரசு தலைவர் தமது தாய்மொழியான சந்தாலியில் பேசுகையில், ஒல்-சிக்கி எழுத்து வடிவில் இந்திய அரசியல் சாசனத்தின் சந்தாலி மொழி பெயர்ப்பு வெளியாகி இருப்பதை பாராட்டினார். செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பங்களையும், ஒல்-சிக்கி எழுத்து வடிவில் பயன்படுத்த தேவையான வசதிகளை உருவாக்கினால், இன்னும் மகிழ்ச்சிகரமாக இருக்கும் என அவர் குறிப்பிட்டார். குடியரசு தலைவர் மாளிகையின் அதிகார்ப பூர்வ இணையதளத்தை, ஒல்-சிக்கி எழுத்து வடிவில் பார்க்க முடியும் என தாம் நம்புவதாகவும் இதனால் சந்தாலி மொழி மேலும் ஊக்கம் பெறும் என்றும் அவர் குறிப்பிட்டார். ஒல்-சிக்கி எழுத்து வடிவை உருவாக்குவதில் பண்டிட் ரகுநாத் முர்மு மேற்கொண்ட முயற்சிகளை குடியரசு தலைவர் பாராட்டினார். ஒல்-சிக்கி எழுத்து வடிவை பயன்படுத்தி சந்தாலி மொழியில் பல படைப்புகளை உருவாக்கிய எழுத்தாளர்களையும் விழாவின் போது அவர் கவுரவித்தார். ஜார்கண்ட் ஆளுநர்

திரு சந்தோஷ்குமார் கங்வார், முதலமைச்சர் திரு ஹேமந்த் சோரேன் உள்ளிட்ட பலர் விழாவில் கலந்து கொண்டனர்.

ஆன்டி-பயாடிக்

நோய்க் கிருமிகளை எதிர்ப்பதற்கான ஆன்டி-பயாடிக் மருந்துகளை, தேவைப் படும்போது, மருத்துவரின் பரிந்துரைப்படி மட்டுமே பயன்படுத்த வேண்டுமென இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் தலைமை இயக்குநர் டாக்டர் ராஜீவ் பஹல் கூறி உள்ளார். நோய்க் கிருமிகளின் மருந்து எதிர்ப்புத் திறன் அதிகரித்து வருவது தொடர்பாக பிரதமர் திரு நரேந்திர மோடி அண்மையில் மன் கி பாத் நிகழ்ச்சியில் பேசியது குறித்து புதுடெல்லியில் இன்று திரு பஹல் செய்தியாளர்களிடம் பேசுகையில் நிமோனியா போன்ற நோய்களுக்கு ஆன்டி பயாடிக் மருந்துகளை தேவையின்றி தாறுமாறாக பயன்படுத்தினால், மருந்துகளின் செயல் திறன் குறையும் என்றார். டாக்டர்களின் பரிந்துரை சீட்டு இருந்தால் மட்டுமே ஆன்டிபயாடிக் மருந்துகள் விற்கப்படுவதை உறுதிப்படுத்த பல மாநிலங்களில் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

அமித் □ ா-வடகிழக்கு

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சியில், அசாம் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்கள் கடந்த 11 ஆண்டுகளில் பெருமளவில் வளர்ச்சி அடைந்திருப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார். இன்று அசாம் மாநிலம் நாகாவ் மாவட்டத்தில் விழா ஒன்றில் பேசிய அவர் வடகிழக்கு பிராந்தியத்தில் வளர்ச்சி மட்டுமின்றி அமைதியும் மேம்பட்டுவருவதாக கூறினார். மகாபுருஷ் ஸ்ரீமந்த சங்கரதேவரின் புதுப்பிக்கப்பட்ட அவதாரத் தலத்தை, விழாவின் போது அவர் திறந்து வைத்தார். தொடர்ந்து குவஹாத்தி மாநகர காவல்துறை ஆணையர் அலுவலகத்தின் புதிய கட்டிடம், மற்றும், ஜோதி விஷ்ணு கலாச்சார வளாகம் என்னும் மாபெரும் கலையரங்கையும் மத்திய

உள்துறை அமைச்சர் திறந்து வைத்தார். அசாம் இயக்க தியாகிகளுக்கு, குவஹாத்தியில் புதிதாக கட்டப்பட்டுள்ள நினைவகத்திலும் அவர் மலர் அஞ்சலி செலுத்தினார்.

கோயல்

ஆஸதிரேலிய அரசின் இறக்குமதிப் பட்டியலில் உள்ள எல்லா பொருட்களுக்கும், இந்திய ஏற்றுமதியாக இருந்தால், வரும் ஜனவரி 1 முதல், முழு வரி விலக்கு கிடைக்கும் என, மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார். இந்திய-ஆஸ்திரேலியா பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக உடன்பாட்டின் 3-ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி, இன்று சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில் அவர் இதைத் தெரிவித்துள்ளார். இந்த உடன்பாட்டினால் ஆஸ்திரேலியாவிற்கான இந்தியாவின் ஏற்றுமதி, கடந்த நிதியாண்டில் 8 சதவிகிதம் அதிகரித்து, நாட்டின் வர்த்தக சமநிலை மேம்பட்டுள்ளதாகவும் குறிப்பாக இவ்வாண்டு ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான காலக் கட்டத்தில் ஆபரணங்கள் மற்றும் ரத்தினக் கற்களின் ஏற்றுமதி 16 சதவிகிதம் அதிகரித்து இருப்பதாகவும் அமைச்சர் கூறி உள்ளார். ஆஸ்திரேலிய நாட்டிற்கான இந்திய காய்கறிகள்-பழங்கள், கடல் உணவு, காபி மற்றும் மசாலாப் பொருட்களின் ஏற்றுமதி கணிசமாக அதிகரித்து இருப்பதால் விவசாயிகள், தொழிலாளர்கள், சிறு-குறு நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் நல்ல முறையில் பயன்பெற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தலைப்புச் செய்திகள்

இளைஞர்கள் புதியதொழில் நுட்பங்களை, **நன்னெறிகளின் அடிப்படையிலான கவனத்துடன்** அணுக வேண்டும் என, குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதா கிருஷ்ணன் கூறி உள்ளார்.

இன்று புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் 30-ஆவது பட்டமளிப்பு விழாவில் குடியரசு துணைத் தலைவர் கலந்து கொண்டு, மாணவர்களுக்கு பட்டங்கள் மற்றும் பதக்கங்களை வழங்கினார்.

முன்னதாக புதுச்சேரியில் நடைபெற்ற பொது வரவேற்பு நிகழ்ச்சியிலும் குடியரசு துணைத் தலைவர் கலந்து கொண்டு, ஸ்மார்ட் நகரத் திட்டத்தின் கீழ் வீட்டு வசதி பெறும் பயனாளிகளுக்கு சாவிகளை வழங்கினார்.

2025-ஆம் ஆண்டில் இந்தியாவின் தேசிய பாதுகாப்புக் கட்டமைப்பு, பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையின் கீழ், உறுதியான முறையில் வலுவடைந்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

------------------------